# கம்பு விதைத்து மானாவாரி விவசாயிகள் கூடுதல் வருவாய் பெறலாம்

கம்பு ஒரு முக்கிய தானியமாக, உணவு, தீனி மற்றும் தீவனப்பயிராக பயிரிடப்படுகிறது. இது வறட்சி தாங்கி வளரும் தானியங்களில் முக்கிய பயிராக உள்ளது. சத்துமாவு தயாரிப்பில் கம்பு முக்கிய மூலப்பொருளாக உள்ளது. இந்திய வேளாண் அமைச்சகத்தின், இரண்டாம் முன் மதிப்பீட்டின் படி, 2014-15ஆம் ஆண்டில் கம்பு உற்பத்தி 7.91 மில்லியன் டன்கள் எனக் கணிக்கப்பட்டது. இது கடந்தாண்டு உற்பத்தியை விட 17 சதவீதம் குறைவாகும்.

2013-14ல், தமிழ்நாட்டில் கம்பு 54412 எக்டரில் சாகுபடி செய்யப்பட்டு 1.17 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. இதன் உற்பத்தி திறன் எக்டருக்கு 2.158 டன்களாகும். கம்பு உற்பத்தியில் விழுப்புரம் மாவட்டம் முதலிடத்தில் உள்ளது. தூத்துக்குடி, மதுரை, தேனி, திருவண்ணமலை, விருதுநகர் மற்றும் திண்டுக்கல் ஆகியவை கம்பு சாகுபடி செய்யும் பிற முக்கிய மாவட்டங்களாகும். தற்போது, விழுப்புரம் சந்தையில், கம்பு குவிண்டாலுக்கு ரூ.1550 வரை விற்கப்படுகிறது. வர்த்தக மூலங்களின் படி, நடப்பாண்டில் கமபிற்கு மாற்றாக மக்காச்சோளம் பயிரிட்ப்படுகிறது.

விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 15 ஆண்டுகளாக விழுப்புரம் சந்தையில் நிலவிய கம்பின் விலையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும், வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் ஆய்வு செய்து, சந்தை ஆய்வுகளையும் மேற்கொண்டது.

ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், கம்பின் பண்ணை விலை பிப்ரவரி – மார்ச், 2016ல் குவிண்டாலுக்கு ரூ.1500 - 1600 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை விலை அடிப்படையில், கம்பு விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

**<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள:</u>**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத்  தகவல் மையம்

வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயம்புத்தூர்-641003

தொலைபேசி- 0422-2431405

**<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:</u>**

பேராசிரியர் மற்றும் தலைவர்

சிறுதானியங்கள் துறை

தாவர இனவிருத்தி மற்றும் மரபியல் மையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயம்புத்தூர்-641003

தொலைபேசி- 0422-2450507